# சமத்துவம் மற்றும் மரியாதையை ஊக்குவித்து வளர்த்தல்; குடும்ப வன்முறையைத் தடுத்து நிறுத்துவது குறித்த பல மதங்களுக்கு இடையேயான ஒரு கூட்டிணைவு

குடும்ப வன்முறை என்பது நமது சமுதாயத்தில் ஒரு முக்கியப் பிரச்சனையாகும். இது பல பெண்களையும் குழந்தைகளையும் பாதிக்கிறது.

குடும்ப வன்முறை என்பது ஒரு வாழ்க்கைத்துணையை அல்லது குடும்ப உறுப்பினரை உடல், பாலியல், உணர்வு அல்லது உளவியல் ரீதியாக தவறாக நடத்துகின்ற அல்லது அச்சமூட்டுகின்ற அல்லது கட்டுப்படுத்துகின்ற ஏதேனும் நடத்தையாகும். இத்தகைய நடத்தைகள் ஒரு குடும்ப உறுப்பினரை ஆதிக்கம் செய்யவும், அவர்களை அச்சத்தில் வைக்கவும் பயன்படுத்தப்படுகின்றன.

பெண்களுக்கு எதிராக வன்முறை நிகழ்வதற்கு முன்னரே அதை நம்மால் தடுத்து நிறுத்த முடியும். இது தடுத்தல் என்றழைக்கப்படுகிறது. ஏன் பெண்களுக்கு எதிராக வன்முறை நடக்கிறது என்பதை நாம் முதலில் புரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். பெண்களுக்கு எதிரான வன்முறை கீழ்க்கண்டவற்றினால் நிகழ்கிறது என்று ஆராய்ச்சிகள் கூறுகின்றன:

***ஆண்கள் மற்றும் பெண்களுக்கு இடையே உள்ள ஏற்றத்தாழ்வு:** பெண்களுடன் ஒப்பிட்டால், ஆண்கள் பெரும்பாலும் பொது வாழ்வில் அதிகாரத்தையும் செல்வாக்கையும் கொண்டிருக்கின்றனர். உதாரணமாக, அரசியல், வர்த்தகம் மற்றும் மதம் ஆகியவற்றில் பெரும்பாலும் ஆண்களே தலைமைப் பொறுப்புகளை வகிப்பதற்கு வாய்ப்புள்ளது. அவர்கள் தங்களுடைய உறவுமுறைகள் மற்றும் வீட்டில் என, தங்களுடைய தனிப்பட்ட வாழ்விலும் கூட அதிக அதிகாரத்தையும் செல்வாக்கையும் கொண்டிருக்கலாம்.

***ஆண்கள் மற்றும் பெண்களின் பணிப் பொறுப்புகளில் எதிர்பார்க்கப்படுபவை:** நமது சமுதாயத்தில் ஒரு ஆணும் ஒரு பெண்ணும் எப்படி இருக்க வேண்டும் என்ற குறிப்பிட்ட எதிர்பார்ப்புகள் உள்ளன. இத்தகைய எதிர்பார்ப்புகள் பெரும்பாலும் பெண்களைக் கீழ்ப்படிந்து செல்பவர்களாகவும், வீட்டு வேலைகள் மற்றும் குழந்தைகளைப் பராமரித்தல் ஆகியவற்றுக்குப் பொறுப்பானவர்களாகவும் பார்க்கிறது, அதேவேளையில் ஆண்களைப் பெரும்பாலும் வலிமையானவர்களாகவும், மனத்திட்பம் வாய்ந்தவர்களாகவும், பிற வேலைகளுக்குப் பொறுப்பானவர்களாகவும் (தோட்ட வேலை போன்றவை) பார்க்கிறது.

***வன்முறையை ஆதரிக்கின்ற மனப்பான்மைகளும் நடத்தைகளும்:** பெண்களுக்கு எதிரான ஆண்களின் வன்முறையை ஆதரிக்கின்ற சில மனப்பான்மைகள் நம் சமூகத்தில் உள்ளன. அவை இத்தகைய வன்முறையை ஏற்கத்தகாதது என்று கருதுவதில்லை.

பெண்களுக்கு எதிரான வன்முறையைத் தடுப்பதற்கு, நாம் பாலின ஏற்றத்தாழ்வைப் போக்க வேண்டும்.

சமத்துவத்தையும் மரியாதையையும் ஊக்குவித்து வளர்ப்பதில், சமுதாயத்திற்கு வழிகாட்டுதலை வழங்குகின்ற ஆற்றல்மிக்க முன்மாதிரிகளாக, மத நம்பிக்கைகளைக் கொண்ட சமுதாயங்கள் பங்களிக்கலாம்.



இந்த வளஆதாரமானது CHALLENGE Family Violence திட்டத்தின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டுள்ளது. இது City of Casey, Cardinia Shire Council, City of Greater Dandenong மற்றும் Monash Health ஆகியவற்றுக்கு இடையிலான ஒரு கூட்டு முயற்சியாகும். பெண்கள் மற்றும் அவர்களுடைய குழந்தைகளுக்கு எதிரான வன்முறையைக் குறைத்தல் (Reducing Violence against Women and their Children) நிதியுதவித் திட்டத்தின் கீழ் இத்திட்டத்திற்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. இது உள்ளூர் குற்றத் தடுப்பு விவகாரங்களுக்கு உள்ளூர் தீர்வுகளான, விக்டோரியா அரசாங்கத்தின் Community Crime Prevention Program -இன் ஒரு அங்கமாகும்.

City of Casey · Cardinia · Greater Dandenong City of Opportunity · MonashHealth · Victoria State Government

இந்த வளஆதாரத்திற்கு City of Greater Dandenong Interfaith Network ஆதரவளிக்கிறது.

# எவ்வாறு மத மற்றும் ஆன்மீகத் தலைவர்களால் சமத்துவம் மற்றும் மரியாதையை ஊக்குவித்து வளர்க்க முடியும்?

## 1. விழிப்புணர்வை உருவாக்குங்கள்

குடும்ப வன்முறை, பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் அதற்கான காரணங்கள் ஆகியவை குறித்த விழிப்புணர்வை உருவாக்குதல் மிகவும் முக்கியமாகும். ஏனெனில், இது பெரும்பாலும் பொதுமக்களிடம் பேசப்படும் ஒரு பிரச்சனையாக இருப்பதில்லை. இந்த விவகாரம் குறித்த உண்மை நிலவரங்களை சமுதாயச் செய்திமடல்களில் இடம்பெறச் செய்வது, நீங்கள் வழிபாடு செய்கின்ற இடங்களைச் சுற்றி சுவரொட்டிகளை ஒட்டுவது அல்லது சிற்றேடுகளை விநியோகிப்பது ஆகிய நடவடிக்கைகளின் மூலம் இதைச் செய்யலாம்.



## 2. சமுதாயத்தில் இது குறித்துக் கலந்துரையாடுங்கள்

பெண்கள் மற்றும் ஆண்களின் பணிப் பொறுப்புகளிலும், அவர்கள் ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள உறவுமுறைகளிலும் உள்ள சமத்துவம் மற்றும் மரியாதை குறித்த உரையாடல்களை மத மற்றும் ஆன்மீகத் தலைவர்கள் தொடங்கலாம். இதை சமுதாயத்திற்கான சொற்பொழிவுகள் அல்லது கூட்டங்களின் போது மேற்கொள்ளலாம் அல்லது சிறிய சமுதாயக் குழு உறுப்பினர்களுடன் சாதாரண உரையாடல்களின் மூலம் மேற்கொள்ளலாம். இத்தகைய கலந்துரையாடல்களில் ஏதேனும் வழியில் பெண்களையும் ஆண்களையும் உள்ளடக்குவதை உறுதிசெய்யுங்கள்.



## 3. சமுதாய விழிப்புணர்வில் ஈடுபடுங்கள்

ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே மரியாதையை ஊக்குவித்து வளர்ப்பதில் குறிக்கோள் கொண்டுள்ள பல்வேறு சமுதாய நடவடிக்கைகள் உள்ளன. உதாரணமாக, White Ribbon Day நவம்பர் 25ம் தேதியன்று மற்றும் அக்டோபரில் Week Without Violence. இவற்றில் உங்கள் சமுதாயத்தினர் பங்கேற்கலாம் அல்லது தாங்களே சுயமாக ஒரு நிகழ்ச்சியை நடத்தலாம்.




## 4. சமுதாயத்தில் நடவடிக்கை எடுங்கள்

ஆண்கள் மற்றும் பெண்களுக்கு இடையேயான சமத்துவத்தைப் பேணுவதற்கான ஒரு சமுதாயத் திட்டத்தை உருவாக்குவதன் மூலம் தங்களுடைய அன்றாட நடைமுறைகளை மாற்றிக்கொள்வதற்கு, ஒவ்வொருவரும் மதம் சார்ந்த சமுதாயத்தில் நடவடிக்கை எடுக்கலாம்; மரியாதை நிறைந்த உறவுமுறைகள் மற்றும் இளையர்களுக்குக் கற்றுத்தருதல் ஆகியவை குறித்து புதிய தலைவர்களுக்குப் பயிற்சி அளித்தல்.



## 5. மாற்றத்திற்கான கூட்டு முயற்சிகளை உருவாக்கி ஆதரித்துப் பேசுங்கள்

மற்ற மதரீதியான சமுதாயத்தினருடன் கூட்டு முயற்சிகளை உருவாக்குங்கள். எவ்வாறு குடும்ப வன்முறையைத் தடுத்து நிறுத்துவது என்பது குறித்த யோசனைகளையும் நடவடிக்கைகளையும் பகிர்ந்துகொள்வதற்கான ஒரு பயனுள்ள வழி, பல்வேறு மதங்களுக்கு இடையிலான வலையமைப்புகளாகும். மதரீதியாக மக்களின் பழக்கவழக்கங்களை மாற்றுவதற்கு, சமுதாயங்களும் வலையமைப்புகளும் கூட ஒன்றிணைந்து ஆதரித்துப் பேசுங்கள்.

